**செப்டம்பர் – 28**

# TNPSC துளிகள்

- சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (International Monetary Fund - IMF) 57.1 பில்லியன் டாலரை அர்ஜென்டினா கடன் உதவியாக பெற்றுள்ளது. நாட்டின் சீரற்ற பொருளாதாரத்தை உயர்த்துவதை இலக்காக கொண்டு உலகளாவிய அமைப்பிலிருந்து வழங்கப்படும் மிகப்பெரிய கடனுதவி இதுவேயாகும்.

# தேசியச் செய்திகள்

## GSTN-ஐ அரசு நிறுவனமாக மாற்றம்


- மத்திய அமைச்சரவையானது சரக்குகள் மற்றும் சேவை வரி கட்டமைப்பை (GSTN – Goods and Services Tax Network) அரசுக்கு சொந்தமான நிறுவனமாக மாற்றுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- புதிய மறைமுக வரி வசூலிப்பு முறையின் தகவல் தொழில்நுட்ப முதுகெலும்பான இது தற்போது 100% அரசுக்கு சொந்தமாகி உள்ளது.
- தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து GSTN-இன் 49% பங்குகளைக் கொண்டுள்ளன. மீதமுள்ள 51% பங்குகளானது 5 தனியார் நிதி நிறுவனங்களிடம் உள்ளன.
- முன்னதாக, 2018 ஆம் ஆண்டு மே மாதத்தில் 50% பங்குகளை மத்திய அரசும் மீதமுள்ள 50% பங்குகளை மாநில அரசுகள் இணைந்தும் வைத்து ஒரு அரசு நிறுவனமாக GSTN-ஐ அமைக்க GST ஆணையமானது ஒப்புக் கொண்டது.

## தேசிய டிஜிட்டல் தகவல் தொடர்பு கொள்கை (NDCP – National Digital Communication Policy) - 2018

- மத்திய அமைச்சரவையானது தேசிய டிஜிட்டல் தகவல் தொடர்பு கொள்கை

2018க்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- மேலும் இது தொலைத் தொடர்பு ஆணையத்தை டிஜிட்டல் தகவல் தொடர்பு ஆணையம் என மாற்றியமைக்கவும் அனுமதியளித்துள்ளது.
- இந்தியாவின் டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பத் துறையின் நவீனகால தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தற்போதுள்ள தேசிய தொலைத் தொடர்பு கொள்கை 2012-ஐ (National Telecom Policy - 2012) இது மாற்றுகிறது.
- NDCP ஆனது 5G மற்றும் கண்ணாடி இழைகள் போன்ற நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் மலிவு விலையில் நாடு முழுவதும் அதிவேக பிராட்பேண்ட் (அகலக்கற்றை இணையம்) ஊடுருவலை அதிகப்படுத்துவதன் மீது கவனம் செலுத்துகிறது.
- இது டிஜிட்டல் தகவல் தொடர்புகளுக்கான நிலையான மற்றும் மலிவான அணுகலை உறுதி செய்வதற்காக 'அலைவரிசைகளுக்கு உகந்த விலையை' பின்பற்றுவதற்கான வழிமுறைகளையும் உள்ளடக்கியது ஆகும்.




## லோக்பால் தேடல் குழு

- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியான ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையின் கீழ் 8 உறுப்பினர்களைக் கொண்ட லோக்பால் தேடல் குழுவை அரசு அமைத்துள்ளது.
- பிரசார் பாரதியின் தலைவர் ஏ. சூர்ய பிரகாஷ், SBIயின் முன்னாள் தலைவர் அருந்ததி பட்டாச்சார்யா மற்றும் நீதிபதி சுகாராம் சிங் யாதவ் ஆகியோர்

இக்குழுவின் மற்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

- இக்குழுவானது லோக்பாலின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்களை லோக்பால் தேர்வுக் குழுவிற்கு பரிந்துரை செய்யும்.



# சர்வதேசச் செய்திகள்

## டைம்ஸ் உயர் கல்வியின் (THE) உலகளாவிய பல்கலைக்கழக தரவரிசை 2019

- பெங்களூரின் இந்திய அறிவியல் கழகம் (Indian Institute of Scince - IISc) ஆனது 2019 இன் டைம்ஸ் உயர் கல்வி (THE - Times Higher Education) உலகளாவிய பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக (251-30 வரிசையில்) முதலிடத்தில் உள்ளது.
- ஐஐடி-இந்தூர் (Indian Institute of Technology - IIT) ஆனது (351-400) நாட்டின் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இது இந்த பல்கலைக்கழகத்தை உலகளாவிய சிறந்த 400 பல்கலைகழகங்களின் பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளது.
- இதனைத் தொடர்ந்து IIT மும்பை மற்றும் IIT ரூர்கி ஆகியவற்றுடன் கர்நாடகாவில் உள்ள ஜகத்குரு ஸ்ரீ சிவராத்திரீஸ்வரா பல்கலைக்கழகமும் சேர்ந்து நாட்டின் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.
- இந்த தரவரிசையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் முதலிடத்தையும் கேம்பிரிட்ஜ் இரண்டாவது இடத்தையும், ஸ்டான்போர்டு மூன்றாவது

இடத்தையும் பிடித்துள்ளன.

- மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனமானது ஒரு இடம் முன்னேறி நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.
- பட்டியலில் இடம் பிடித்த இந்திய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் 42லிருந்து இந்த ஆண்டு 49 ஆக உயர்ந்துள்ளது. இதனால் இந்தியா 5 வது மிகச்சிறந்த பிரதிநிதித்துவ நாடாக அமைந்தது.




## நெல்சன் மண்டேலா - சமாதானத்தின் தசாப்தம்


- இந்த ஆண்டு நெல்சன் மண்டேலா பிறந்த 100வது ஆண்டாகும். இதனால் ஐ.நா. சபை ஆனது 2019-2028 காலத்தை 'நெல்சன் மண்டேலா சமாதானத்தின் தசாப்தம்' என அறிவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் உயர்ந்த கொள்கைகள், சமாதானம், மன்னிக்கும் குணம், இரக்கம், மனிதர்களின் கௌரவம் ஆகியவற்றை மண்டேலா தன்னகத்தேக் கொண்டிருந்தார்.
- தென்னாப்பிரிக்காவில் பிறந்த நெல்சன் மண்டேலாவின் பிறப்பை கௌரவிக்கும் வகையில் அவரது சிலையானது ஐ.நா. சபையில் திறக்கப்பட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## அத்தியாவசியமல்லாத 19 பொருட்களுக்கு இறக்குமதி வரி உயர்வு

- மத்திய நிதி அமைச்சகமானது உயர்மட்ட நுகர்வோர் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவதை கட்டுப்படுத்த "19 அத்தியாவசியமல்லாத பொருள்கள்" மீதான இறக்குமதி வரியை அதிகரித்துள்ளது.
- இந்த 19 அத்தியாவசியமல்லாத பொருட்களில் காற்று குளிர்விப்பான்கள், குளிர்பதன பெட்டிகள், சலவை இயந்திரம் மற்றும் விமான விசையாழி எரிபொருள் ஆகியவை உள்ளடங்கும்.
- நடப்புக் கணக்கு பற்றாக்குறையை (CAD – Current Account Deficit) சுருக்குவதன் மூலம் ரூபாய் மதிப்பின் சரிவை நிலைப்படுத்தவும், வெளிநாட்டுக்கு வெளியேறும் நிதிகளை இந்தியாவிற்கு திரும்பக் கொண்டு வரவும் இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது.
- கையிருப்பு மற்றும் வெளியேறும் அந்நிய செலவாணி ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு CAD ஆகும். இது ஏப்ரல்-ஜுன் காலண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.4% ஆக அதிகரித்துள்ளது.




## நிதி உள்ளடக்கல் குறியீடு- FII (Financial Inclusion Index)

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சகமானது நிதி உள்ளடக்கல் குறியீட்டை புதுடெல்லியில் துவங்கியுள்ளது.
- வருடாந்திர FII ஆனது நிதித்துறை அமைச்சகத்தின் நிதிச்சேவைத் துறையால் வெளியிடப்படும்.
- இந்தக் குறியீடு 3 அளவீட்டு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.
  - ✓ நிதிச் சேவைகளை அணுகல்
  - ✓ நிதிச் சேவைகளின் பயன்பாடு
  - ✓ தரம்
- இது பெரிய அளவிலான கொள்கை முன்னோக்குதலை வழிகாட்டும் நிதியியல் உள்ளடக்கலின் தெளிவான நிலையை அளிக்கும் ஒற்றைக் கலப்பு குறியீடாகச் செயல்படும்.

## சட்டப்படியான ரொக்க வீத விதிகள் எளிமையாக்கம்

- ரிசர்வ் வங்கியானது, நாட்டின் பணச் சந்தைகளை பாதிக்கும் பணப் புழக்கக் குறைவை எளிதாக்கும் முயற்சியில் வங்கிகளின் சட்டப்படியான பண இருப்பு வீதங்களை மேலும் அணுகும் விதமாக அனுமதியளித்துள்ளது.
- ரிசர்வ் வங்கியின் விதிகளின்படி, வங்கிகள் தங்களுடைய சட்டப்படியான ரொக்க வீத இருப்பிலிருந்து (SLR - Statutory Liquidity Ratio) 15% வரை (தற்போது 13%) தங்களுடைய ரொக்க உள்ளடக்க வீதம் (LCR - liquidity coverage ratio) போன்ற தேவைகளுக்காக எடுத்துக் கொள்ளலாம் என அறிவித்துள்ளது.
- ரிசர்வ் வங்கியின் இந்த நடவடிக்கையானது NBFC-க்களுக்கு (Non Banking Financial Companies) கடனளிப்பதற்கான வங்கிகளின் விருப்பமின்மை மற்றும் இறுக்கமான பணப்புழக்க நிலைமை ஆகியவற்றைத் தொடர்ந்து

எடுக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## அக்மார்க் தரச் சான்றிதழிற்கான ஆன்லைன் தளம்

- மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகமானது, வேளாண் விளைபொருள்களுக்கு தரச் சான்றளிப்பு முத்திரையான 'அக்மார்க்' தொடர்புடைய விண்ணப்பங்களை செயலாக்குவதற்காக ஆன்லைன் மென்பொருளை துவங்கியுள்ளது.
- அக்மார்க் சான்று முத்திரையானது சந்தைப்படுத்துதல் மற்றும் ஆய்வு இயக்குநரகம் என்ற அரசு நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட தர நிலைகளை கொண்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகிறது.
- இது 1937 ஆம் ஆண்டின் வேளாண் உற்பத்தி (தரப்படுத்தல் மற்றும் குறியிடுதல்) சட்டத்தால் சட்டப்பூர்வமாக அமல்படுத்தப்பட்டது (1986 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது).
- அக்மார்க் ஆன்லைன் அமைப்பானது நாடு முழுவதும் தரக் கட்டுப்பாட்டு செயல்பாடுகளை நடத்துவதற்காக செயல்படுத்தப்படுகிறது. இது 24 x 7 என்ற வகையில் அணுகக் கூடியதாகும்.





## அஸ்திரா வெற்றிகரமாக சோதனை

- இந்திய விமானப்படையானது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட பார்வைக்கெட்டும் தூரத்தை தாண்டி வான்வெளியிலிருந்து வான் இலக்குகளை தாக்கி அழிக்கும் திறனுடைய ஏவுகணையான அஸ்திரா என்ற ஏவுகணையை சுகாய் - 30 ரக விமானத்திலிருந்து ஏவி வெற்றிகரமாக சோதனை செய்திருக்கின்றது .
- இந்த ஏவுகணை மேற்கு வங்காளத்தின் கலைகுன்டா விமானப் படை நிலையத்திலிருந்து சோதனை செய்யப்பட்டது.
- இந்த ஏவுகணையானது கொடுக்கப்பட்ட இலக்கான பான்ஷி ரக ஆளில்லா

விமானத்தை உயர்துல்லியத் தன்மையுடன் வெற்றிகரமாக தாக்கியது.

- அஸ்திரா ஏவுகணையானது இந்திய விமானப்படை மற்றும் DRDO (Defense Research and Development Organization) ஆல் இணைந்து உருவாக்கப்பட்டது. இது ஒற்றை நிலை திட எரிபொருளால் இயங்கக் கூடியது மற்றும் அனைத்து காலநிலைகளிலும் இயங்கக்கூடிய ஏவுகணையாகும்.




## MSME-க்களுக்கு கடன் வழங்குவதற்காக இணையதளம்

- மத்திய நிதி அமைச்சகமானது சிறு குறு மற்றும் நடுத்தர (MSME – Micro, Small and Medium Enterprises) தொழில் நிறுவனங்களின் கடன்களுக்கான முதல்நிலை ஒப்புதலை ஒரு மணி நேரத்திற்குள் வங்கி கிளைக்கு செல்லாமலேயே பெறுவதற்காக ஒரு தளத்தைத் தொடங்கியுள்ளது.

- www.psbloansin59minutes.com என்ற இந்த வலைப்பக்கமானது MSME-க்களுக்காக ரூ. 1 கோடி வரையிலான கடன்களுக்கான முதன்மை ஒப்புதலை 59 நிமிடங்களுக்குள்ளாகவே பெறும் வசதியை வழங்குகிறது.

- இந்தத் தளமானது இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI – Small Industries Development Bank of India) மற்றும் 5 பொதுத்துறை வங்கிகள் (PSBs – Public Sector Banks) ஆகியவற்றிலிருந்து கடன் ஒப்புதல் பெறுவதற்கு மட்டுமேயாகும்.

- இந்தத் தளமானது நிதி அமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறையின் கீழ் செயல்படுகின்ற 5 பொதுத்துறை வங்கி நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு SIDBI வங்கியால் வழிநடத்தப்படுகின்ற யுக்திசார் முன்முயற்சியாகும்.

## வியக்கத்தகு இந்தியா கைபேசி செயலி

- வியக்கத்தகு இந்தியா கைபேசி செயலி மற்றும் வியக்கத்தகு இந்தியா சுற்றுலா வழிவகை செய்வோர் சான்றிதழ் திட்டம் ஆகியவற்றை மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- 2019 ஆம் ஆண்டிற்கான UNWTO (United Nations World Tourism Organization) அமைப்பிற்கான அதிகாரப்பூர்வ உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களை இந்தியா நடத்தவுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.




## தரவு பகுப்பாய்விற்கான சிறப்பு மையம்

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது தரவு பகுப்பாய்வு துறையில் அரசு அதிகாரிகள் சிறப்பாக செயல்படுவதற்காக தரவு பகுப்பாய்விற்கான சிறப்பு மையமொன்றை தொடங்கியுள்ளது.
- இது தேசிய தகவல் மையம் (NIC – National Informatics Centre) மற்றும் தேசிய தகவல் மைய சேவைகள் கூட்டிணைவு (NICSI - National Informatics Centre Services Incorporated) ஆகியவற்றால் கூட்டாக அமைக்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச ஒட்டுமொத்த அணு ஆயுத ஒழிப்பு தினம் - செப்டம்பர் 26

- சர்வதேச ஒட்டுமொத்த அணு ஆயுத ஒழிப்பு தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26 அன்று உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது.
- உலகளாவிய அளவில் அணுசக்தி ஆயுதங்களை குறைப்பதே மிக முக்கியம் என்பதை உலக சமுதாயத்திற்கு மீள்வலியுறுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த நாளானது டிசம்பர் 2013-ல் ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் பிரகடனம் செய்யப்பட்டது.
- மேலும் ஐ.நா பொதுச் சபையானது ஆகஸ்ட் 29-ம் தேதியை அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச நாளாக அனுசரிக்கிறது. இது 2009ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பிரகடனப்படுத்தப்பட்டது.




- - - - - - - - - - - - - -